# கைதிகளின் பெற்றோர் அரசுக்கு அவசர தகவல்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 65 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 31 இதழ் 150
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15 — 07 — 1993


(யாழ்ப்பாணம்)
தமது பிள்ளைகள் மீண்டும் சாகும் வரையான உண்ணாவிரதத்தில் ஈடுபட நேர்ந்தமை குறித்து தாம் சொல்லொணா துயரம் கொண்டுள்ளதாகவும் தமது பிள்ளைகளை (4-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் தமிழ் அகதிகளுக்கு பெரும் நெருக்கடி

(சென்னை)
தமிழகத்தில் இருந்து இலங்கை அகதிகளை இந்திய அதிகாரிகள் பலவந்தமாக இலங்கைக்கு திருப்பி அனுப்புகிறார்கள் என்று தமிழர் அமைப்பொன்றின் தலைவர் (4-ம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சியில் முன்னேறிய படையினர் புலிகளால் விரட்டியடிப்பு

(ஆனையிறவு)
இயக்கச்சி பண்ணைப் பகுதியிலுள்ள இராணுவ காவலரணுக்கு முன்னால் 75 யார் முன்னேறி வந்த படையினரை விடுதலைப்புலிகள் விரட்டியடித்துள்ளனர்.
நேற்று முன்தினம் முற்பகல் 11-15 மணியளவில் இச்சம்ப (4-ம் பக்கம் பார்க்க)

## ● சுற்றிவளைப்பின் மூலம்

# யாழ். குடாவை தனிமைபடுத்தி

# கிழக்கில் இராணுவத் தாக்குதல்!

### படையினர் திட்டமிடுகின்றனர்

(கொழும்பு)
யாழ். குடாவை சுற்றிவளைப்பின் மூலம் தனிமைப்படுத்திவிட்டு கிழக்கில் தொடர்ந்தும் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் திட்டத்தை படையினர் தற்போது மேற்கொண்டு வருவதாக இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளதாக 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

அந்த அதிகாரிகளின் கூற்றுப்படி! யுத்தக் கைதி கைதிகளின் விடுதலை விவகாரம் முறிவுற்றமையினால் அதிஷ்டவசமாக இத்திட்டத்திற்கு பாதிப்பு ஏற்படவில்லை. திட்டம் செயலிழந்திருக்கும் யாழ். குடாவை தனிமைப்படுத்துவதன்மூலம் கிழக்கிற்கு புலிகளின் உதவி கிடைப்பதை தடுத்து விடமுடியும் இது (4-ம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கு உதவும் திட்டங்களை இராணுவம் தீவிரமாக எதிர்க்கும்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கு இராணுவ ரீதியில் உதவக்கூடும் என்ற எந்தத் திட்டத்தையும் இராணுவம் கடுமையாக எதிர்க்குமென இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக "சண்டே ஐலண்ட்" தெரிவித்துள்ளது.
மேலும் அந்த அதிகாரிகள் கூறுகையில்; வடக்கு-கிழக்கில் யுத்த நடவடிக்கையை பாதிக்கச் செய்யும் எந்தவொரு நடவடிக்கையையும் அரசியல்வா (4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கில் பாரிய தாக்குதல் இல்லை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் கடந்த ஒரு வாரத்தில் பாரிய இராணுவ தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லையென இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன தெரிவித்துள்ளார்.
எனினும் வடக்கிலும் கிழக்கிலும் சில பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.
இத்தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டும் ஐவர் காயமடைந்துள்ளதாகவும் கூறினார். (இ)

## திருமலை பகுதியில் விமானத் தாக்குதல்

(திருகோணமலை)
திருமலையில் நேற்றுமுன்தினம் மாலை 4-30 மணியளவில் ஆண்டாங்குளம், அம்கொட காட்டுப்பகுதியில் இரு ஹெலிகொப்டர்களும், இரு பொம்மர்களும் ஒன்றரை மணி நேரமாக இடைவிடாது தாக்குதலை நடாத்தின என்று தெரிவிக்கப்படுகிறது.
குண்டு வீச்சு விமானங்கள் பலத்த குண்டு வீச்சுக்களை மேற்கொண்டன.
இதேயிடத்தில் நேற்றுக்காலை 6-30 மணியளவில் ஒரு ஹெலிகொப்டரும் இரண்டு பொம்மர்களும் ஒரு மணி நேரமாக தாக்குதலை மேற்கொண்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது
சேதவிபரங்கள் பற்றி தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை. (ம-இ)

## கொழும்பு நகரில் நேற்று பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(கொழும்பு)
கொழும்பு கட்டுநாயக்கா வீதியை விஸ்தரிப்பு செய்வதை எதிர்த்து நேற்று கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.
இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது இந்த வீதியை விஸ்தரிப்பு செய்வதற்கு யப்பான் வெளிநாட்டு அமைச்சின் ஆதரவோடு யப்பான் பொருளாதார சம்பந்தமான அமைப்பு ஒன்று ஈடுபட்டுள்ளது. இந்த அலுவலகத்தின் முன்பே குழந்தைகள், தாய்மார்கள், ஆண்கள் என்று ஏராளம் பேர் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.
இந்த வீதி விஸ்தரிப்பால் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப் (4-ம் பக்கம் பார்க்க)

### பாஸ்கரலிங்கத்திற்கு எதிராகக் கோஷம்

(கொழும்பு)
நிதியமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கத்திற்கு எதிராக நேற்று கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப்பேரணியில் கண்டனக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.
கொழும்பு - கட்டுநாயக்கா வீதி விஸ்தரிப்பு சம்பந்தமாக பாதிப்புக்குள்ளானவர்கள் நேற்று கொழும்பில் நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியிலேயே பாஸ்கரலிங்கத்திற் (4ம் பக்கம் பார்க்க)

## பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில் தாமதம்

(திருநெல்வேலி)
பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களுக்கு நியமனம்வழங்குவதற்கு மாகாண அரசில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
யாழ். கல்வித்திணைக்களத்தினால் விபரப்பட்டியல்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும் அங்கிருந்து மாகாண சபைக்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
மாகாணக் கல்வியமைச்சினாலேயே இந்நியமனங்கள் வழங்கப்படுவதால் இதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (157-இ)

### அடுத்த 5 ஆண்டில்

## எயிட்ஸ் நோய் பாதிப்பிற்கு 12,000 இலங்கையர் இலக்காவர்

(கொழும்பு)
இலங்கையில் எயிட்ஸ் பரவக்கூடிய அபாயம் இருப்பதாக, எயிட்ஸ் நோய் பற்றிய தேற்காசிய நாடுகளுக்கு உலகளாவிய திட்டத்தை சேர்ந்த டாக்டர் மேர்சன் எச்சரித்துள்ளார்.
விஜயத்தை மேற்கொண்டுள்ள டாக்டர் மேர்சன் கொழும்பில் வைத்து பத்திரி (4-ம்பக்கம் பார்க்க)

## மன்னிப்புச்சபை இந்தியா மீது கண்டனம்

(லண்டன்)
இந்தியாவில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இந்திய பாதுகாப்பு படையினர் சித்திரவதை, கற்பழிப்பு, கொலை போன்ற மனிதஉரிமை மீறல்களை தொடர்ந்தும் செய்து வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபை மீண்டும் கண்ட 4-ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### சிறுவர் கதை நூல்

உங்கள் சிறு பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வரதர் கதை மலர்-1 — "அவன் பெரியவன்" — அநு. வை. நாகராஜன் எழுதிய சுவைமான கதை நூல். ரூபா 12. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (எ3248)

### O/L கணிதம்

Distinction பெறுபேறுடைய ஆண்டு 9, 10 உட்பட 15 வருடங்கள் கிடைத்தான்கள் திருத்திய அனுபவமுள்ள B. Sc (Gey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, கிவன் கோவிலடி, திருநெல்வேலி. (இ-322)

### தவறிவிட்டது

180, கே. கே. எஸ் வீதியில் வசிக்கும் சு. சரோஜினி ஆகிய எனது அடையாள அட்டை இல: 616710320 X தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். ச பாலசுப்பிரமணியம், 337, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (இ-314)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், கைப்பேறின்மை, வீரியக்குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-231)

— பெயர் மாற்றம் —
யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறைவீதி,
— யாழ்ப்பாணம். —
(சி 252)

### ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைக்கல்வி நிலையம் இன்று 15ம் திகதி முதல் நான்கு நாட்களுக்கு வேதாகம ஓவியக் கண்காட்சியையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்துகிறது.

யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் மேற்படி நிகழ்ச்சிகள் தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5மணிவரை நடைபெறவுள்ளது. -வி-இ

### கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்தியபகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் பகவான் போதனைகளை விளக்கும் மனித மேம்பாட்டுக் கல்விக்கண்காட்சி எதிர்வரும் 17ம் தேதி சனிக்கிழமை மு.ப, 9-00மணி தொடக்கம் பி. ப 4-30 மணிவரை இல. 355 நாவலர் வீதியில் அமைந்துள்ள சமித்தி மண்டபத்தில் நடைபெறும்.

அகில இலங்கை பகவான் ஸ்ரீ சத்தியசாயிசேவா நிலையங்கள் மத்திய அமைப்பாளர் திரு. எஸ் சிவஞானம் நிலையக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைப்பார். -162

# கொத்தணி ரீதியாக தளபாட விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கு கொத்தணி ரீதியாக தளபாடங்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் கப்பல் மூலம் யாழ். கல்வித் திணைக்களத்திற்குக் கொண்டுவரப்பட்ட தளபாடங்களில் பண்டத்தரிப்பு கல்விக்கோட்டத்திற்கு பாலர் வகுப்புக்கான 397 மேசைகளும், பாலர் வகுப்புக்கான 322 கதிரைகளும், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான 183 மேசைகளும், இவர்களுக்கான 253 கதிரை கிடைத்துள்ளன.

வட்டுக்கோட்டை, இளவாலை, பண்டத்தரிப்பு, சுழிபுரம் ஆகிய கொத்தணிகளில் தளபாடங்கள் பற்றாக்குறையுள்ள பாடசாலைகளுக்கு பண்டத்தரிப்பு கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளரினால் பங்கீடு செய்து வருகின்றது. இதேவேளை கப்பல் மூலம் அண்மையில் கொண்டு வரப்பட்ட இலவச பாடப்புத்தகங்களும் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (7)

## மஹோற்சவம்

(ஆனைப்பந்தி)

யாழ் வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலய இவ்வருட மஹோற்சவம் இம்மாதம் 24ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும்.

31ம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், ஆகஷ்ட் 1ம் திகதி தேர்த்திருவிழாவும் 2ம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் மஹோற்சவம் நிறைவு பெறும். (101)

# துர்க்கா ஆலயத்தில் ஆடி அமாவாசை கருமம்

பக்திக்கோர் பரவசமும், முத்திக்கோர் மூதுரையும், அமைதிக்கோர் ஆத்ம சித்தியையும், துயருக்கோர் திருப்புகழும் உதவுவதுபோல எமது துயரங்களிற்கு சாந்தியளிக்க பிதுர் கருமங்கள் நன்றாக உதவவே செய்யும்.

உத்தராயண காலத்தில் சிவராத்திரி அமாவாசையிலும், தக்ஷிணாயண காலத்தில் ஆடி அமாவாசையிலும், தீர்த்த சங்கல்ப ஸ்னானமும் பிதிர்களிற்கான தில தர்ப்பணமும் எம்மை பீடித்த துயரங்கள் தொலைய அவை உதவுகின்றன

19-7-93 திங்கட்கிழமை மாலைச் சந்தனின் ஆடி அமாவாசைத் தினத்தன்று தெல்லிப்பழை துர்க்கையம்பாள் ஆலய துர்க்காபுஷ்கரணி தீர்த்தக்கேணியில் சைவ மக்கள் அனைவரும் யாத்திரை சென்று சங்கல்ப தீர்த்தமாடி தனம், கீர்த்தி, ஆயுள், சுவர்க்கம் என்பவற்றை தரவல்ல பிதுருக்களை உத்தேசித்து செய்யப்படும் தர்ப்பணங்களை ஆற்றுவீர்களாக.

இறந்தோருக்கு ஆற்றும் புண்ணியச் செயல் இதுவேயாகும்.

— மஹாராஜஸ்ரீ
சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
(மாவை ஆதீனகர்த்தா)

# குடும்பப் பதிவு அட்டை விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்களும், பூரணமான விபரங்களைப் பதியாதவர்களும் இம்மாதம் 31ம் திகதிக்கு முன் தமது பகுதிக் கிராம சேவ

(4ம் பக்கம் பார்க்க)

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான
அபிவிருத்தி நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்

## அமைத்தல் கூட்டம்

மேற்படி கூட்டம் பின்வரும் ஒழுங்கில் பின்வரும் இடங்களில் 17-7-93ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

1. வடமராட்சி, வடமராட்சி கிழக்கு — பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி.
2. தென்மராட்சி — சாவகச்சேரி நகர சபை.
3. வலிகாமம், நல்லூர், யாழ்ப்பாணம் — யாழ். இந்துக்கல்லூரி, குமாரசாமி மண்டபம்.

சம்பந்தப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றும்வண்ணம் கேட்டுக்கொள்கிறேன்.

சுந்தரம் டிவகலாலா,
பி. உ. உ. ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
(ஏ-3253)

ஊனமுற்றோருக்கு உதவுங்கள்

யாழ். லயன்ஸ் கழக ஆதரவில்
நடைபெறும்
அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில்
பங்கு பற்றுவதன் மூலம் ஊனமுற்ற உங்கள் சகோதரருக்கு உதவுங்கள்

ஊனமுற்றோரினால் மட்டுமே விற்கப்படும்,
அதிர்ஷ்டலாபச் சீட்டு ரூபாய் 10/- மட்டுமே

அதிர்ஷ்டசாலிகளுக்கு கிடைக்கும் பரிசு
முதலாம் பரிசு 10,000/- இரண்டாம் பரிசு 5,000/-
மூன்றாம் பரிசு 2,500/-
மேலும் ஆறு ஆறுதல் பரிசுகள் தலா 250/- ரூபா வழங்கப்படவுள்ளது.
(எ-3254)

வில்லூன்றி புனித தீர்த்தம்
ஆடி அமாவாசை

★ வில்லூன்றி புனித தீர்த்தம் துப்புரவு செய்வதற்காக 17-07-93 காலை 7-00 மணி முதல் 19-07-93 காலை 7-00 மணி வரை பொதுமக்கள் பாவனைக்கு மூடப்பட்டிருக்கும். ஆயினும், அந்தியேட்டி மடத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்கு தடையிருக்காது.

★ 19-07-93 காலை 7-00 மணியளவில் வில்லூன்றி விநாயகப் பெருமான் புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி கொண்டதன்பின், வில்லூன்றி தீர்த்தத்தில் தீர்த்தமாட பொதுமக்கள் அனுமதிக்கப்படுவர்.

★ ஆடி அமாவாசையன்று தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர் தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பரிபாலன சபை.

வில்லூன்றி தேவஸ்தானம்
ஆடி அமாவாசை
தீர்த்தோற்சவம்

அதிகாலை 5-30 மணி வசந்தமண்டப பூசை
காலை 7-00 மணி வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி
காலை 7-45 மணி சுவாமி கோவிலுக்கு எழுந்தருளல்

தர்ம பரிபாலன சபை.

வில்லூன்றி
10-07-1993.
(இ-320)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி கந்தசாமி தங்கமணி
(காந்தம்)

மலர்வு: 03-09-1948
உதிர்வு: 15-06-1993

கண்டுகொள்ள வந்திடுவாய் கொழும்பால் என்றுநாம்
எண்ணி நிதம் இருக்கையில் அம்மாவுன் துயரச்செய்தி
கண்ணயர்ந்து துயிலுமாப்போல் குலமணியே உன் முகத்தை
மண்ணகத்தில் பார்த்தோமே! மறப்பதெப்போ! முடியாதே!
விண்ணகத்தில் நீயிருந்து விருப்பமுடன் சாந்திபெற
திண்ணமாக ஈசனை தினந்தோறும் துதிப்போமே!

பொ. கந்தசாமி (கணவன்) (மெக்கானிக்)
பிள்ளைகள், மருமக்கள், சகோதரி.

"ஸ்ரீ ரமணா"
அல்வாய் மேற்கு,
அல்வாய்.
(இ 311)

> மணிவாக்கு
> பொதுநலச்சேவை எதனையும் பொறுப்பெடுக்கும் ஒருவன் தன்னை ஒரு பொதுச் சொத்தாக கருதிக்கொள்ள வேண்டும்.- ஜெபர்சன்

## நமது நோக்கு

### அவர்களின் எதிர்காலம்?

யாழ் மாவட்டத்தில் மூன்று வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில் 18 9 சத வீதத்தினர் அண்மைக்காலப் போசாக்கின்மையாலும் 40 சத வீதத்தினர் நீண்டகாலப் போஷாக்கின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இது வெறும் ஊகம் அல்ல. மருத்துவபீட மாணவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் என். சிவராசா தலைமையில் பல தொண்டர் ஸ்தாபனங்களின் ஆதரவுடன் நிகழ்த்திய ஆய்வின் முடிவு!

இந்த ஆய்வின் முக்கிய அம்சங்களில் ஒன்று எமது கவனத்தைக் கவர்ந்துள்ளது. அது என்ன?

நீண்ட நாட்கள் இடம்பெயர்ந்திருக்கும் குழந்தைகளிலே அதிகபோசாக்கின்மை காணப்படுகிறது!

போரின் வெப்பம் தாளாது வீடு வாசல்களை இழந்து வாழ்நாளில் சேமித்த உடமைகள் எல்லாம் துறந்து வீதிகளிலே வதங்கி, அகதி முகாம்களில் நிலைத்து விட்டன பல குடும்பங்கள். இத்தகைய குடும்பங்களின் சிறார்கள் பல இன்னல்களை அநுபவிக்கிறார்கள்

இறுவயதிலேயே போசாக்கின்மையால் வாடும் சிறுவர்கள் உடலும் கெட்டு உள்ளமும் நைந்து உரிய கல்வியைப் பெறாது வாடி வதங்குகிறார்கள்.

எதிர்காலத்திலே தகுந்த தொழிலைத் தேடி வாழ்வைப் புதிதாகக் கட்டி எழுப்பக் கூடிய உடல் வளமோ, மன வளமோ இல்லாது வெறும் நடைப் பிணங்களாக மாறிவருகிறார்கள்.

நாட்டை ஆள நமக்குத்தான் ஆண்டவன் கட்டளை என எண்ணிக் கொண்டிருக்கும் சிங்கள ஏகாதிபத்திய தலைமைக்கு இந்த அகதிச் சிறுவர் போசாக்கின்மை பற்றிக் கவலை ஏற்படக் காரணமில்லை.

இந்தியர்கள் சுதந்திரப் போராட்டம் நடத்திய போது, ஆங்கில அரசு அவர்களைப் பார்த்து, "ஆளும் தகுதியுண்டா? அடிமையே அடங்கிப் போய்விடு!" என்ற தொனியிற் பேசி வந்தது.

இதனைச் சுட்டிக்காட்டிய பாரதியார் பாடலின் ஒரு துளி இதோ:

"ஒற்றுமை பயின்றனோ-அடிமை!
உடம்பில் வலிமை
உண்டோ?"

விடுதலைகோரி நிற்கும் சமுதாயம் இதுபற்றி ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

புக்காராக் குண்டுகள் மாத்திரமல்ல, போசாக்கின்மை போன்ற குண்டுகளாலும் தமிழினம் பாதிப்படைவதைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா?

போசாக்கின்மையைப் போக்கிடத் தகுந்த திட்டங்கள் வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தத் தொண்டர் நிறுவனங்களுக்குத் தோள்கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறோம்!

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

# உலகில் அதிகரித்து வருகிறது!

உலகில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமீப காலத்தில் அதிகரித்து வருவதாக அண்மையில் வியன்னாவில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைகள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் போர்களைச் சந்திக்கும் நாடுகளில் மிக மோசமாக இடம்பெறுகின்றன. இருக்க உறைவிடமோ உண்ண உணவோ மற்றும் அத்தியாவசிய சுகாதார வசதிகளோ இன்றி தமது குடும்பத்தவர்களுடன் தவிக்கும் பெண்கள் ஆக்கிரமிப்பாளர்களின் கொடிய பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகித் துயருகின்றார்கள்.

1989-ம் ஆண்டு ஈரானில் விபசாரத்தில் ஈடுபட்டனர் என கல்லால் எறிந்து கொல்லப்பட்ட 36 பேரில் 24 பேர் பெண்களாவார். தென்னாபிரிக்காவில் 1985ம் ஆண்டு நொன்சலோ விக்ரோரியா லெங்கி என்ற பிரபலமான மனித உரிமைப் போராட்ட சட்டத்தரணி ஒருவர் சுட்டுக்கொலைப்பட்டார். இப்பெண்மணி ஐக்கிய ஜனநாயக முன்னணியின் 16 முன்னணி அங்கத்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர். புரட்சியை பதவிக்கு வந்த பின்னர் கவிழ்க்கப்பட்ட அரசுடன் தொடர்புகொண்டிருந்தார்கள் என்பதற்காக பல பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இந்தியாவைப் பொறுத்த வரை வருடாந்தம் ஆயிரம் பெண்கள் கொடுக்கப்படுவதாக உத்தியோகபூர்வ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில் 99 வீதமான குடும்ப பெண்கள் கணவர்களால் அடித்து துன்பப்படுத்தப்படுகிறார்கள். பிரான்ஸில் கொலையுண்ட பெண்களில் 51 வீதமானோர் கணவர்களால் கொலைப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பெண்களை ஆண்கள் கொடுமைப்படுத்தும் ஈனச்செயல் உலகம் பூராவும் அன்றாடம் நடந்து கொண்டிருக்கிறது. ஆபிரிக்காவில் ஆறில் ஒரு பெண்மணி தன் கணவனால் அடித்து துன்புறுத்தப்படுகிறார்.

தெற்கு பசுபிக்கின்பாடிவா நியூகினியாவில் 1981ம் ஆண்டு கொலை செய்யப்பட்டவர்களில் அறுபது சத வீதமானவர்கள் பெண்கள். அண்மையில் செர்பிய படை வீரர்களினால் பிடிக்கப்படுகின்ற பொஸ்னிய முஸ்லிம் பெண்கள் மீது பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனால் ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட பொஸ்னிய பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெண்களைப் பாதுகாக்க எவ்வளவோ சட்டதிட்டங்கள் உள்ளன பெண்களின் பாதுகாப்புக்கென்று பல அமைப்புகள் இருந்தும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. (ரி)

பங்குச்சந்தை ஊழல் விவகாரம்

# 1991-ம் ஆண்டு ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

(புதுடில்லி)

பங்குபத்திர ஊழல் பற்றி விசாரித்துவரும் கூட்டுநாடாளுமன்றக் கமிட்டி பிரதமர் அலுவலகத்திலிருந்து 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம்தொடர்பான சில ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது

1991ம் ஆண்டு நவம்பர் மாதம் 4ம் திகதியன்று பிரதமந்திரி அலுவலகத்தில் அலுவல் பட்டியலும் கோரப்பட்டுள்ளது அடுத்த செவ்வாய்க்கிழமைக்குள் பிரதம மந்திரி அலுவலகம் இந்த ஆவணங்களைச் சமர்ப்பிக்கவுள்ளது.

ஹர்ஷத் மேத்தாவின் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கூட்டு நாடாளுமன்றக்குழு ஒன்பதுபேர்களுக்கு கேள்விகள் சிலவற்றையும் அனுப்பி வைத்துள்ளது. அடுத்த செவ்வாய்க்கிழமைக்குள் இந்த கேள்விகளுக்கான பதில்களை அனுப்புமாறும் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது.

பங்குத்தரகர் ஹர்ஷத் மேத்தாவை சந்திக்கவேயில்லை என்பதனை நிரூபிக்கும் வகையில் பிரதமர் நரசிம்மராவ் உட்பட அவருடன் சம்பந்தப்பட்ட ஒன்பது பேரும் தமது டைறிகளையும் நாடாளுமன்றக் கூட்டுக்குழுவிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. -மி

## மேலும் இருவர் கைது

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கும்பலைச் சேர்ந்த மேலும் இருவர் பெரியார் மாவட்டம் சத்தூர் காட்டுப் பகுதியில் கர்நாடகப் பொலிசாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்

இவர்களிடமிருந்து சக்திமிக்க வயர்லெஸ் கருவிகள் உட்பட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (க-சி)

## கரும்புலிகள் நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினத்தை நினைவுகூரும்முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக முகாமைச் செயலகத்தில் கடந்த 5ம் திகதி நினைவுக் கூட்டம் நடாத்தப்பட்டது

இந்த நினைவுக் கூட்டத்தை மேஜர் பிரதாப் செட்டியின் தாயார் ஈகைச் சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார். இதில் யோகரட்ணம் யோகி, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கணேஷ், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

# நிர்வாக சேவையில்

## பதவியுயர்வு பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாகசேவையின் I ம் வகுப்புக்கு பின்வருவோர் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள்.

கே. சண்முகநாதன், சி. வைத்திலிங்கம், எம். இ. அருந்தவச்செல்வம், திருமதி கே. சிவசிதம்பரம், ஏ. சிவகாமி கே. பரமலிங்கம், எஸ். அமிர்தலிங்கம், எஸ். எஸ். சண்முகதாஸ், கே. சபாபதிப்பிள்ளை, வி. வேலும்மயிலும். (162 சி)

## சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம்

யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் யூனிசெவ் நகர்புற அடிப்படைத் திட்டத்தின் கீழ் குடும்பல நல சேவையாளர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், சுத்திகரிப்பு பரிசோதகர்கள், சுகாதார தரிசிப்பாளர்களுக்கானமூன்று நாள் பயிற்சி வகுப்புகள் சுகாதாரப் பணிமனை விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது. (162)

# வேலிச் சண்டை

## கத்தி வெட்டில் முடிந்தது

(பண்டத்தரிப்பு)

உடுவில் தெற்கைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும், அயல் வீட்டுப் பெண் ஒருவருக்குமிடையில் எல்லை வேலிக்குக் கதியால் போடுவதில் ஏற்பட்ட வாக்குவாதம் கத்தி வெட்டில் முடிவடைந்துள்ளது.

கத்தி வெட்டினால் படுகாயமடைந்த திருமதி தி. புவனேஸ்வரி என்பவர் தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இக் கத்திவெட்டுச் சம்பவம் பற்றி சுன்னாகம் காவல் துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது. (72-சி)

## இன்று

(அரியாலை)

யாழ்.கோட்டை முனியப்பர் கோவில் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (59)

0 0 0

(யாழ்ப்பாணம்

எழிலூர் அன்னை வேளாங்கன்னி ஆலய வருடாந்த திருவிழா இன்று 15ம் திகதி மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு திருநாட் கூட்டுத் திருப்பலியும்- திருச்சுரூப பவனியுடன் முடிவடையும். (வி-சி)

## இராசி பலன்

15-07-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஆனி 31)

ஏகாதசி மு. இ. 7-41வரை, கார்த்திகை மாலை 5-36 வரை. இராகுகாலம் பகல் 1-30 முதல் 3-00 வரை, சுபநேரம் காலை 7-30 முதல் 9-00 வரை, ஏகாதசி விரதம், மரணயோகம்.

மேடம்- மனத்துன்பம், உறவினர்பகை, தொழில் முடக்கம்.

இடபம்- மக்களால் லாபம், தொழில்வெற்றி, புதியகடன்.

மிதுனம்- தடுமாற்றம், கடும்யோசனை, அலைச்சல்.

கடகம்- பெருமையின் செயல், வசதிவாய்ப்பு, புகழ்

சிம்மம்- குடும்ப சுகம், வாக்கு வன்மை, பிதாஉதவி.

கன்னி- பண ஏமாற்றம், வசதிக்குறைவு, வீண் பகை.

துலாம்- தொழில் குழப்பம், அதிகாரிகள் தொல்லை, செலவு.

விருச்சிகம்-நண்பர்பெருமை சுபகாரியம், தியாகம்

தனுசு- கருத்து வேற்றுமை, புதியஸ்தானம், காரியசித்தி.

மகரம்- குடும்ப உல்லாசம், நினைத்தது கைகூடும். பண வரவு.

கும்பம்- வைத்திய செலவு, குடும்ப பிரிவு, பழிவாங்கல்.

மீனம்- கல்வி மேன்மை, தொழில்யோகம், புத்தி மேன்மை.

— ஜோஸ்யர்

அமெரிக்காவில்

## அனல் காற்றுக்கு 50 பேருக்கு மேல் பலி

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் கடுமையான அனல் காற்று வீச ஆரம்பித்துள்ளது. இதனால் இதுவரை 50க்கும் மேற்பட்டோர் இதில் சிக்கி இறந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி பகுதிகளிலுள்ள பல வீடுகளில் குளிர்சாதன வசதிகள் இல்லாததனால் இவ் வீடுகளில் குடியிருந்த வயோதிபர் பலரே அனல் காற்றுத் தாக்கத்தை தாங்க முடியாது இறந்துள்ளனர்.

இதன் தாக்கத்தினால் அமெரிக்காவின் முக்கிய நகரங்களான நியூயோர்க், வாஷிங்டன் ஆகிய பகுதிகளிலும் பெரும் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (வி-சி)

## கார்மல் அன்னை திருவிழா

அரியாலை)

யாழ். கதீற்றல் கார்மல் வீதிச் சந்தியிலுள்ள கார்மல் அன்னை (உத்தரிய மாதா) வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது, இத்திருவிழா நாளை 16ந் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் திருநாள் திருப்பலியுடன் நிறைவு பெறுகின்றது. (59)

# ஆபாசத் திரைப்படங்களுக்கு அரசு தடை விதிக்கிறது

(கொழும்பு)

வயது வந்தவர்களுக்கு என காண்பிக்கப்படும் ஆபாச திரைப்படங்களுக்கு தடை விதிக்கப்படவுள்ளது. இத்தகைய திரைப்படங்களை பார்ப்பவர்கள் அதிகம்பேர் பாடசாலைச் சிறுவர்களென கண்டறியப்பட்டுள்ளது.

கலாசார அலுவல்கள் தகவல்துறை அமைச்சர் டபிள்யு. ஜே. எம். லொக்கு பண்டாரவின் பணிப்புரையின்பேரில் இந்த தடை கொண்டுவரப் படவுள்ளது. இதன்படி வயது வந்தவர்களுக்கென அத்தாட்சிப்படுத்தப்பட்ட திரைப் படங்கள் இனிமேல் இறக்குமதி செய்யப்படமாட்டாது. இந்தத் திரைப்படங்களில் அநேகமானவை ஐரோப்பிய நாடுகளிலிருந்தே கொண்டுவரப் படுகின்றன.

உள்ளூர் திரைப்படங்களும் இப்படியான திரைப்படங்களை தயாரிக்காதவாறு தணிக்கை குழுவினர் பார்த்துக்கொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (கே-சி)

## ஆபாசப் படம் பார்த்த 100 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரில் 43 இடங்களில் பொலிசார் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது பல ஆபாச பத்திரங்கள், வீடியோ கசெற்றுகள் கைப்பற்றப்பட்டன.

ஆபாசப்படங்களைப் பார்த்துக்கொண்டிருந்த 100க்கும் மேற்பட்டோரும் கைது செய்யப்பட்டனர். கைதாகியோரில் சிறுவர்களும் அடங்கியிருந்தனர்.

அரசாங்கம் அண்மையில் ஆபாசப்படங்களையும், வீடியோப்படங்களையும் காண்பிப்பதை தடைசெய்திருந்தது. ஆபாச படங்களை காண்பிக்க பயன்படுத்தப்பட்ட வீடியோ டெக், ரி. வி. மற்றும் உபகரணங்களையும் பொலிசார் கைப்பற்றினர். இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். (கே-சி)

## கடமையின்போது ஆசிரியர் மரணம்

(நெல்லியடி)

சேவை அடிப்படையில், பாடசாலையில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஆசிரியரொருவர் மாரடைப்பால் நேற்று மரணமானார். இச்சம்பவம் நேற்றுக்காலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கரவெட்டியைச் சேர்ந்தவரும், கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய திரு. கனகசபை சிவபாதசுந்தரம் (வயது 58) என்பவரே இவ்விதம் கடமை நேரத்தில் மரணமானவராவார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், கரவெட்டி பொன்னம்பல வித்தியாலயத்திலும் சேவை அடிப்படையில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது. (160-61-கி)

### குடும்பப்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவகர்களிடம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பப் பதிவு அட்டைகளை வைத்திருப்பவர்களும் அவற்றை இம்மாத இறுதிக்குள் கிராம சேவகரிடம் ஒப்படைப்பதன் மூலம் அநாவசியச் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு, கடந்த 20ம் திகதிய ஈழநாடு' பத்திரிகையைப் பார்க்கவும்.

### கிரிக்கெட்: வெற்றி தோல்வி இல்லை

(கொழும்பு)

இந்திய அணிக்கும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைஅணிக்குமிடையில் வெலகெதரவில் நடைபெற்ற 3நாள் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

ஸ்கோர் விபரம் இந்தியா: 6-342, 1-148. இலங்கை-415. (சி)

## மரண அறிவித்தல்

### முருகன் ஆனுசி

புங்குடுதீவு 1-ம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகன் அவர்களின் அன்பு மனைவி ஆனுசி காலமாகி விட்டார். அன்னார் கந்தையா, கண்மணி, பாலன், உத்தமிப்பிள்ளை, செபமாலை ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரத்தி வல்லிபுரம் (நெடுந்தீவு) சின்னப்பிள்ளை (அனலைதீவு), வைத்திலிங்கம் (வேலணை பிரதேச சபை) விமலா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் கொற்றாவில் பண்டிதர் குடியிருப்பிலுள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று இன்று (15-07-93) வியாழக்கிழமை பி. ப. 4 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

தகவல்: மு. செபமாலை
(மகன்)

(சி-323)

## பரீட்சைகள் ஆரம்பம்

(திருநெல்வேலி)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.

இப் பரீட்சைகள் இம்மாதம் 28-ம் திகதி வரை நடைபெற உள்ளன. இதற்கான ஏற்பாடுகளை கோட்டக்கல்வி அலுவலகங்கள் மேற்கொண்டுள்ளன. (157-சி

## பீரங்கி தாக்குதல்

(புலோலி)

வல்வெட்டித்துறை பொலிகண்டி கடல் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி விசைப் படகுகளில் வந்த கடற்படையினர் பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

நேற்றுக்காலை நடந்த இச்சம்பவத்திலும் பீதியுற்ற மீனவர்கள் தமது படகுகளுடன் கரை சேர்ந்தனர். (61-கி)

### தமிழகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. சந்திரகாசன் தெரிவித்துள்ளார்.

இந்திய அதிகாரிகள் முகாம்களில் வாழும் அகதிகளுக்கு கொடுத்த நிவாரணங்களை குறைத்துள்ளார்கள். அகதிகள் வேலைசெய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அகதிகளின் பிள்ளைகள் பாடசாலைகளில் படிப்பதை நிறுத்துவது போன்ற கெடுபிடிகளை அகதிகள் மேல் சுமத்தியுள்ளார்கள் என்று சந்திரகாசன் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு திரும்ப எண்ணிய அகதிகள் 7000 பேரில் அதிகமானோர் இந்திய அதிகாரிகளின் நெருக்குதலுக்கு மத்தியில்தான் இலங்கை திரும்புகிறார்கள் என்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (ம-சி)

### கைதிகளின்

(1-ம் பக்கம் பார்க்க)

உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக சிறிலங்கா அரசுக்கு அவசர வேண்டுகோள் விடுக்கப் போவதாக யுத்தக் கைதிகளின் பெற்றோர் நேற்று தெரிவித்தனர்.

தமது பிள்ளைகளை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக கூறி அரசு தம்மை ஏமாற்றிவிட்டதாக யுத்த கைதிகளின் உறவினர் தெரிவித்தனர் எனினும் தம்முடன் யாழ்ப்பாணம் வந்து கொழும்பு திரும்பிய கைதிகளின் உறவினர் சிலர் இது விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தாம் அறிவதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்.

யுத்தக்கைதிகளின் உறவினரும் தற்போது இங்கு தங்கியிருப்பவருமான திருமதி கருணவதி தெரிவிக்கையில் தம்மை விடுதலைப் புலிகள் உரிய முறையில் நன்கு கவனித்து வருவதாகவும் தம் பிள்ளைகளை கூட்டிச் செல்ல முடியாத கவலையைத் தவிர வேறு ஒரு குறையோ கவலையோ இல்லையென்று தெரிவித்தார்.

இதேவேளை தமது பிள்ளைகள் விடுவிக்கப்படும் வரை தாம் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருக்கப்போவதாக யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (கே-சி)

## க. பொ. த. (சாதாரண தரம்) விண்ணப்ப முடிவுத் திகதி 31ம் திகதி வரை நீடிப்பு

(திருநெல்வேலி)

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி இம்மாதம் 31-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இப்பரீட்சைக்கு இம்மாதம் 15-ம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இம்முறையிலிருந்து இரண்டாம் முறையாக பாடசாலை ஊடாக பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான கட்டணம் அறவிடுவது ரத்துச் செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (157-கி)

## புலிகளுக்கு ஆதரவில்லை இ. தொ. கா. கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கோ, ஈழம் கேட்கும் வேறு இயக்கங்களுக்கோ நாம் எந்தவிதத்திலும் ஆதரவு செலுத்தவில்லையென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு. எம் எஸ். செல்லச்சாமி 'லக்திவ' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டங்கள் சமர்ப்பித்தும் இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளோடு மாத்திரம் பேசினால் போதுமானது என்று அடிக்கடி பத்திரிகையில் செய்திகள் வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (ம-சி)

## ஐந்நூறு ரூபா கள்ளநோட்டு

(அரியாலை)

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் பொருட்கள் வாங்க வந்தவர் 500 ரூபாய் கள்ளநோட்டு ஒன்றைக் கொடுத்துள்ளதாக தெரியவருகிறது. (59)

## இன்று

(எழுதுமட்டுவாள்)

லெப் சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் 10ம் ஆண்டு வீரவணக்கக் கூட்டமும் நினைவுப் பூங்கா திறப்பு விழாவும் இன்று மாலை 7-30 மணிக்கு மீசாலை வெள்ளம் போக்கட்டியில் லெப். சீலன் வீரவேங்கை ஆனந் வீரச்சாவடைந்த இடத்தில் நடைபெறும். (170-கி)

### கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன.' இதனால் பாதிப்புக்குள்ளானவர்களின் அமைப்பு ஒன்றின் தலைவரான சந்திரா அமரசிங்க குறிப்பிடுகையில் நாங்கள் நீதிமன்றத்தை நாடவுமில்லை. எங்களின் எதிர்ப்புணர்வை தெரிவித்து ஜப்பான் பொருளாதார அமைப்புக்கு மகஜர் கொடுத்துள்ளோம். இந்த வீதி விஸ்தரிப்பால் 2500 வீடுகள் பாதிப்புக்குள்ளாகின்றன. இது பற்றி அரசாங்கம் எமக்கு அறிவிக்கவில்லை. உண்மையாக அரசாங்கம் எங்களை அழைத்து எம்மிடம் கருத்தைக்கேட்டிருக்கவேண்டும்.

அநேகமாக மக்கள் செறிந்துள்ள ஜாஎல, குணுப்பிட்டிய, ராகம போன்ற பகுதி மக்களே பாதிப்படைந்துள்ளனர். இவர்கள் இனிஎங்கே போவது முத்துராசவெல காட்டுக்கா? என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-சி)

### அடுத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையாளர்கட்கு அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது!

இலங்கையில் பல பேருக்கு எச். ஐ. வி என்னும் வைரஸ் கிருமி உள்ளதாகவும் இவர்களால் ஏனையோருக்கும் இந்நோய் பரவாமல் தடுக்கவும் போதிக்கவும் நடவடிக்கை எடுக்காவிடில் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிய நாடுகளில் இலங்கையும் ஒன்றாகிவிடும். தெற்காசியாவில் இலங்கை பங்களாதேஷ் இவ்விரு நாடுகளும், எயிட்ஸ் நோயின் ஆபத்தில் இப்போது மிகக்குறைந்தளவிலே இருக்கின்றன எனினும் நிலைமையை அவதானித்து தகுந்த நடவடிக்கை எடுக்காவிடில் நிலைமை மாறிவிடும்.

இலங்கையில் இதுவரை எயிட்ஸ் நோயினால் 24 பேர் இறந்துள்ளனர் அடுத்த 5 ஆண்டுகளில் 12 ஆயிரம் பேருக்கு இந்நோய் பரவும் அபாயம் உள்ளது என மருத்துவர்கள் எச்சரித்துள்ளார்கள். இந்நோய் பரவாமல் தடுக்க, பீடிக்கப்படவுள்ளவர்க்கு கல்வி புகட்டுவதே சிறந்த செயலாகும். பங்களாதேஷைபோலவே இலங்கையிலிருந்தும் பலர் வேலை தேடி வெளிநாடு சென்றுள்ளனர். இருந்தும் இவ்விரு நாடுகளிலும் தற்போது இந்நோயினால் பெரும்பாதகமான பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கவில்லை என்றார். (கே-சி)

### இயக்கச்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வம் இடம்பெற்றது.

பின்வாங்கிச்சென்ற ராணுவத்தினர் தமது காவலரண்களிலிருந்து ஷெல் வீச்சுக்களை மேற்கொண்டனர். (கே-சி)

### பாஸ்கரலிங்கத்திற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

போக்குவரத்து அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸுக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ம-சி)

### சுற்றிவளைப்பின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு யுத்த தந்திரமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியல் முயற்சிகள் மேலதிக பிரச்சினையை ஏற்படுத்தவோ அல்லது யுத்த முயற்சிகளை பாதிக்கவோ கூடாதெனவும் இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர். (சி)

### புலிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திகள் மேற்கொள்ளமுன் அதற்கான ஆலோசனையை இராணுவத்திடமிருந்து அவர்கள் பெற வேண்டும்.

1990ம் ஆண்டில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை படையினர் பெருமளவு இழப்புகளை சந்தித்துள்ளனர். மீண்டும் அவ்வாறான தொரு நிலை ஏற்பட அனுமதிக்கக் கூடாதெனவும் குறிப்பிட்டுள்ளனர். (கி)

### மன்னிப்புச் சபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னக் குரல் எழுப்பியுள்ளது.

இப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டு அகதிகளாகவுள்ள அகதிகளின் வாக்கு மூலத்தின்படி இந்திய பாதுகாப்பு படையினர் பலரை நீருள் அமுக்கிவதாகவும், மின்சார அதிர்ச்சிக்கு உள்ளாக்கிவதாகவும் பலர் கற்பழிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இப்படியாக சர்வதேச ஒழுங்குமுறைக்கு மாறாக இந்திய அரசு நடந்து கொள்வதைவிட்டு இந்த அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. (கே-கி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B